2016 ஆகஸ்ட் 9]

39—

ஊராட்சியைத் தரம் உயர்த்துதல்

***1750—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள சூளகிரி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர், கழகத் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) குறிஞ்சி மலர் நாயகர், இளைஞர்களின் எழுச்சித் தலைவர், கழகத்தினுடைய பொருளாளர், தமிழக சட்டமன்றப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர், தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே வணக்கத்தினையும், நன்றியினையும் கூறிக்கொள்கிறேன்.*

எனக்கு வாக்களித்த வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக அல்லும், பகலும் அயராது உழைத்து, அரும்பாடுபட்ட கழக நிருவாகிகள்,

கழக உடன்பிறப்புக்கள், கூட்டணிக் கட்சித் தோழர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியிலுள்ள சூளகிரி ஊராட்சியில் புதிய தாலுகா அலுவலகம் அமைந்துள்ளது. சுமார் 15 ஆயிரம் மக்கள் தொகையையும், 7,212 வாக்காளர்களையும் கொண்ட ஊராட்சியாக உள்ளது. சூளகிரியினுடைய வரி வருவாய் சுமார் ரூபாய் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டதாக உள்ளது. இங்கே காய்கறி, தக்காளி, கொத்துமல்லி, புதினா போன்றவற்றிற்கு markets செயல்பட்டு வருகின்றன. அதேபோல சூளகிரி ஊராட்சியானது தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்துள்ளது. எனவே, சூளகிரி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தினால் சூளகிரியின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த அவையிலே தெரிவித்து, இதை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள சூளகிரி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது குறித்த அரசாணை எண் 131-ஐ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வெளியிட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள சூளகிரி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரமுயர்த்துவது குறித்து, அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அக்கருத்துருவை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள் அரசுக்குப் பரிந்துரைகள் அனுப்பும்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூளகிரி பகுதியானது மிகவும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில், அந்த ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்திக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். சூளகிரி 46 ஊராட்சிகளுக்கு மத்தியிலே இருக்கின்றது. அது வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாக சூளகிரி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தொகுதிகள் பிரிக்கப்பட்டபொழுது சில சட்டமன்றத் தொகுதிகளிலே பல ஊராட்சி ஒன்றியங்கள் வருகின்றன. அவை அனைத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர் செல்லவேண்டிய நிலை உள்ளது. ஆகவே, உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக இந்த ஒன்றியங்களை ஒரே சட்டமன்றத் தொகுதியிலே இடம்பெறுகின்ற வகையிலே ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே காட்டுமலையனூர் ஊராட்சியிலே, கங்கநந்தல் என்ற கிராமம் 3, 4 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. அவர்கள் அதை தனி ஊராட்சியாகப் பிரித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கங்கநந்தல் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளை பேரூராட்சிகளாகவும், உள்ளாட்சிகளைப் பிரிப்பது குறித்தும் ஊரக வளர்ச்சி மற்றும்*

ஊராட்சித் துறையால் அரசாணை எண் 131-ல் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 4 மற்றும் 4 (அ)-ல் ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்த வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. ஊராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைத் தரம் உயர்த்துவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு கருத்துரு அனுப்பும்போது, சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியோரை வைத்து முதல் கூட்டத்தை நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்படும் இரண்டாவது கூட்டத்தில் பெறப்படும் கருத்துகளைப் பரிசீலனை செய்தபின் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் கருத்துகள் தனித்தனியாகக் கேட்கப்படும். மேலும் அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளிப்போரின் கருத்துகளும் கேட்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், பரிந்துரை கருத்துகள் தயாரிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பப்படவேண்டும். தேவைப்பட்டால் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூன்றாவது கூட்டத்தையும்கூட கூட்டி கருத்துருகளின்மீதான விண்ணப்பம் மற்றும் ஆட்சேபணைகளையும் பெறலாம். மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்படும் கருத்துருவை துறைத் தலைவர் தனது இறுதி பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படும்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். கால சூழ்நிலைகளுக்குத் தகுந்தமாதிரி தேர்தலுக்கு முன்பாக செய்யப்படும். எனினும், இப்போதைக்கு அதற்கு வாய்ப்பில்லை. கண்டிப்பாக தேவைப்படும்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அதற்குப் பின்னர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கண்டிப்பாக பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள புதிதாகப் பிரிக்கப்பட்ட தொகுதிகளில், பேரூராட்சிகள், ஊராட்சிகள் எல்லாம் ஒரே சட்டமன்றத் தொகுதியின் எல்லைக்குட்பட்டு இல்லாமல், 2 சட்டமன்றத் தொகுதிகள், 3 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்டு இருப்பதால், அவற்றை ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் வருமாறு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பேரூராட்சியைப் பிரிப்பது சம்பந்தமான கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனிக் கேள்வி போட்டால் கண்டிப்பாக பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகருக்கு அடுத்துள்ள பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி மிகப் பெரிய தொகுதியாகும். தமிழகத்திலே பல்லாவரம் தொகுதி பரப்பளவில் மூன்றாவது பெரிய சட்டமன்றத் தொகுதியாகும். விமான நிலையத்திற்கு அருகில் இருக்கின்ற பொழிச்சலூர் ஊராட்சியானது, 50 ஆயிரம் மக்கள்தொகையையும், 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களையும் கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாகும். தங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஊராட்சிப் பகுதிகளில் முத்திரைத்தாள்மூலம் பெறப்படும் வரவுகள் இல்லாத காரணத்தினால், வளர்ச்சி அடையாத நிலையில் அந்த ஊராட்சி இருக்கிறது. ஆகவே, இந்த ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை தொடர்பாக உள்ளாட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் கருத்துரு பெறப்பட்டபின், அவசியம் இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

நவதானிய சேமிப்புக் கிடங்கு

***1035—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, மேல்மொணவூர் ஊராட்சியில் நவதானிய சேமிப்புக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அணைக்கட்டு தொகுதி, மேல்மொணவூர் ஊராட்சியில் நவதானிய சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.